# ஜூலை


# மாத

# இதழ்

# 2025


# ஜூலை மாத முக்கிய தினங்கள்

ஜூலை 1. பொருட்கள் மற்றும் சேவைகள் வரி நாள்
ஜூலை 1. தேசிய மருத்துவர்கள் தினம்
ஜூலை 1. உலக நகைச்சுவை தினம்
ஜூலை 2. உலக விளையாட்டு தினம்
ஜூலை 3. சர்வதேச கூட்டுறவு தினம்
ஜூலை 6. உலக உயிரியல் பூங்காக்கள் தினம்
ஜூலை 7. உலக சாக்லெட் தினம்
ஜூலை 11. உலக மக்கள் தொகை தினம்
ஜூலை 12. உலக தாள் பை தினம்
ஜூலை 15. உலக இளைஞர் திறன் வளநாள்
ஜூலை 15. காமராஜர் பிறந்த நாள்
ஜூலை 15. தேசிய பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை தினம்
ஜூலை 18. நெல்சன் மண்டேலா தினம்.
ஜூலை 20. சர்வதேச சதுரங்க தினம்
ஜூலை 28. உலக இயற்கை வளம் பாதுகாப்பு தினம்
ஜூலை 28. உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம்
ஜூலை 29. சர்வதேச புலிகள் தினம்
ஜூலை 30. சர்வதேச நட்பு தினம்.


01
JULY
WORLD
JOKE
DAY

# தேசிய மருத்துவர்கள் தினம் - ஜூலை 1

"மருத்துவம் நோய்களைக் குணப்படுத்துகிறது, ஆனால் மருத்துவர்களால் மட்டும் நோயாளிகளைக் குணப்படுத்த முடியும்.



கார்ல் ஜங்.


"மருத்துவக் கலை என்பது நோயாளியை மகிழ்விப்பதாகும், அதே நேரத்தில் இயற்கை நோயைக் குணப்படுத்துகிறது.

வால்டேர்.




"குணப்படுத்துவது என்பது காலத்தின் விஷயம், ஆனால் சில சமயங்களில் அது வாய்ப்பின் விஷயமாகவும் இருக்கிறது.


ஹிப்போகிரட்டீஸ்.



"நல்ல மருத்துவர் நோய்க்கு சிகிச்சை அளிக்கிறார்: சிறந்த மருத்துவர் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு சிகிச்சை அளிக்கிறார்.

வில்லியம் ஓஸ்லர்.





D.Monika

IV-B

Happy

Doctors

day. July 1.

D - Deep Feelings

O - observing Eyes

C - Caring Heart

T - Trained Hand

O - open Minded

R - Real Hero



K. Prithika
X - 'D'

July

உலக 1...


மருத்துவர்கள்

தினம்.



R. GOPIKA


IX - C




மருத்துவர்கள் தினம் ஜூலை 1



R. Thirumurugan
VII - A


HAPPY
Doctor's
Day....
July 1
P. Tashuan
VII-D

NATIONAL DOCTOR'S DAY JULY - 1




S. Dharshini VIII-D

# தேசிய மருத்துவர்கள் தினம்

(ஜூலை 1)

வாழும் மனித இனத்திற்கு, பிறந்த குழந்தை முதல் முதியோர் வரை நோயின் பிடியில் சிக்கி மருத்துவமனையில் மருத்துவர்களிடம் சென்று சிகிச்சை பெறுவது தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. முக்கிய உடல் உறுப்புகளான இதயம், நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல் போன்ற முக்கிய உறுப்புகள் சரியாக இயங்கினால் மட்டுமே மனிதன் மகிழ்வாய் வாழ முடியும். நூறு வயதுக்கு மேல் வாழ்பவரும் இளம் வயதிலேயே வியாதியால் மரித்துப் போவதும் அறிந்த நிகழ்வுகள். கடந்த நூற்றாண்டில் பிளேக், பெரியம்மை போன்ற கொடூர நோய்களால் ஆயிரக்கணக்கானோர் மாண்டு போனதை மறந்திட முடியாது. காலங்கள் கடந்தோட நோய்களை வெல்ல, உலக நாடுகளில் மருத்துவர்கள் தோன்றினார்கள்.

பா. லோகேஸ்வரி

X - C

# தேசிய மருத்துவர்கள் தினம்
- July 1

பிறர் உயிர் காக்கும் மருத்துவர்கள்
தன்னலத்தை நினைப்பதில்லை

சாதி மத பேதங்கள் தம்
மனதோடு பிணைப்பதில்லை

துறை சார்ந்த அறிவு சேர்க்கை
இவர்களுக்கு எல்லை இல்லை

அருவருப்பு என்பதுவும்
இவர்களுக்குத் தொல்லை இல்லை

அன்பும், கருணையும் தவிர
வேறெதுவும் தெரிந்ததில்லை

பண்புடனே பழகும் இவர்க்கிருக்கும்
சிறிதளவும் பஞ்சமில்லை

பணிக்காக பலநேரம் ஓய்வு
எடுக்க நேர்வதில்லை

காலனுடன் போராட இவர்கள்
காலநேரம் பார்ப்பதில்லை

B. ஜோதிகாஸ்ரீ
XII - A


# உலக மருத்துவர்கள் தினம்

## ஜூலை - 1

2019-ஆம் ஆண்டு தேசிய மருத்துவர்கள் தினத்தின் கருப்பொருள் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிரான வன்முறைக்கு பூஜ்ஜிய சகிப்புத்தன்மை என்பதாகும்.

மேற்கு வங்காளத்தின் இரண்டாவது முதல்வரும் புகழ்பெற்ற மருத்துவருமான டாக்டர் பிதன் சந்திர ராயின் பிறந்த மற்றும் இறந்த ஆண்டு ஒரே நாளில் கொண்டாடப்படும் அவரை கௌரவிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

A. மோனிஷா
XI-AT




M. Swathy XI-CE

தேசிய மருத்துவர்கள் தினம்.

- ஜீலை - 1

பிறர் உயிர் காக்கும் மருத்துவர்கள்
தன்னலத்தை நினைப்பதில்லை!
சாதிமத பேதங்கள் தம்
நெஞ்சோடு பிணைப்பதில்லை!
துறை சார்ந்த அறிவு சேர்க்க
இவர்களுக்கு எல்லை இல்லை!
அருவருப்பு என்பதுவும்
இவர்களுக்குத் தொல்லை இல்லை!
அன்பும், கருணையும் தவிர
வேறெதுவும் நெஞ்சிலில்லை!
பண்புடனே பழகும் இவர்க்கிருக்கும்
சிறுதளவும் பஞ்சமில்லை!
இவர்கள் புகழுரைக்க எம்மொழியிலும்
வார்த்தை யில்லை!


நன்றி...

P. ஹர்ஷா
XI - BT.

MONISHA X-C

JULY - 1





International
Joke Day
July 1
S. Divyadharshini
IX-B


July-1
HAPPY
Joke Day
SHam.v
IX-B

09:07:2025




N. Thavanesh VI 'C'


தேசிய மருத்துவர்கள் தினம்
ஜூலை - 1
HAPPY DOCTORS DAY
R. Divya
X - B

ஜூலை 1 தேசிய மருத்துவர்கள் தினம்..

வாழும் மனித இனத்திற்கு, பிறந்த குழந்தை முதல் முதியோர் வரை நோயின் பிடியில் சிக்கி மருத்துவமனையில் மருத்துவர்களிடம் சென்று சிகிச்சை பெறுவது தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. முக்கிய உடல் உறுப்புகளான இதயம், நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல் போன்ற முக்கிய உறுப்புகள் சரியாக இயங்கினால் மட்டுமே மனிதன் மகிழ்வாய் வாழ முடியும். நூறு வயதுக்கு மேல் வாழ்பவரும் இளம்வயதிலேயே வியாதியால் மரித்துப் போவதும் அறிந்த நிகழ்வுகள்.

R. DHARSHINI
IX-E


ஜீலை : 1

# தேசிய மருத்துவர்கள் தினம்



M.காயத்ரி IV - A

# SPORTS DAY ஜீலை - ௨



விக்னேஷ்
X - A


July 1
NATIONAL
SPORTS DAY
S.Susithra IX-B

விளையாட்டு என்பது உடலுக்கு மட்டுமல்ல,
மனதுக்கும் ஒரு பயிற்சி

உடற்பயிற்சி என்பது ஒரு பழக்கம்
அது உங்களை வலிமையாக்கும்.

தோல்வியை கண்டு அஞ்சாதீர்கள்.

அது உங்களை வெற்றிக்கு தயார்படுத்தும்.

உழைப்பும் விடாமுயற்சியும் எப்போதும்
வெற்றியை தரும்.

விளையாட்டு உங்களை ஒரு போதும்
ஏமாற்றாது அது உங்களை எப்போதும்
உற்சாகப்படுத்தும்.

கா. கௌசிகா
V - D



# NATIONAL SPORTS DAY... July 2


Sports Day is one of the most exciting days at school. We have many fun activities like running races, relay races, and long jump. There are also team sports like football and tug-of-war. All the students participate, and everyone cheers for their friends. Teachers and parents watch games and support us. Before the day, we practice a lot to do our best. It is a day to show our strength, speed and teamwork. At the end of the day, there are medals and certificates for the winners.

P. Parameshwari

XII - 'BE'



World
Sports
day...
July 2
S.Navin
VII 'D'

ஜீணவ - ௨.






P.Abinaya XI-CE


WORLD POPULATION DAY
11th July
SAVE EARTH
CONTROL POPULATION
Housing
Poverty
Water Shortages
Food Shortages
Unemployment
Pollution
S. Pavithra
VIII-B


World population Day 11th July.
N. Varun. VIII-B

# HAPPY CHOCOLATE DAY July - 7





E. நிஷா

X - C

ஜூலை -7 உலக சாக்லேட் தினம்




M. Pappitha X-B


07 JULY
WORLD CHOCOLATE DAY


WORLD CHOCOLATE DAY JULY-7
5 Star
Dairy Milk
S. Yamini - X - "B"

4.7.2025
Friday...

# World chocolate Day. July.7.2025




* The world chocolate Day is observed on 7 July...
* The Day was first brought in Europe in 1550...
* World chocolate day is celebrated in Different countries on different day.
* chocolate in one of the most important Desserts that can be enjoyed and including on its own...

Sanjana.S
VIII.D


## உலக சாக்லெட் தினம் ஜூலை 7

உலக சாக்லெட் தினம் ஜூலை 7-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இது சாக்லெட் பிரியர்களால் கொண்டாடப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும். உலக சாக்லெட் தினம் ஜூலை 7 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது இந்த நாளில் சாக்லெட் மீதான அன்பையும், அதன் சுவையையும் மக்கள் கொண்டாடுகிறார்கள். சில தகவல்களின் படி, சாக்லெட் ஐரோப்பாவில் முதன் முதலில் ஜூலை 7, 1550-ல் வெளிவந்தது. நினைவாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் மக்கள் சாக்லெட்டை ருசித்து மகிழ்கிறார்கள். மேலும் சாக்லெட் தொழில் துறையின் முக்கியத்துவத்தையும், சாக்லெட் தயாரிக்கும் முறைகளையும் நினைவு கூறுகிறார்கள்.

வெ. ஜெயஸ்ரீ
XII-A.




SANJAY 7th A


Happy
CHOCOLATE
DAY....
July 7
chocolate
G. Kalaiyarasi
X-B

Happy Chocolate

Day

July 7



S. Jeevaneshwaran

IX - D

விடியல்

# JULY-7 - WORLD CHOCOLATE DAY




S. YASHINI
X̄ -B


# கர்மவீரர் காமராஜர்

- July 15

கருமை நிறக் கண்ணன்
ஆட்சியில் நீ மன்னன்,
தூய்மை அரசியல் சின்னம்
துடிப்பான செயல் வீரன்.,
தாகம் தீர்க்கும் அணைகள்
தந்தது உன் கைகள்,
பல தொழிற்சாலைகள்
பறைசாற்றும் உன்பெயரை,
பள்ளிகளை விதைத்தாய்
பல மேதைகள் வந்தார்கள்.
உனக்கில்லை குடும்பம்
தமிழ் மக்களே உன்குடும்பம்,
தமிழ்த்தாயின் தலைமகனே
நீ என்றும் புகழ் மகனே,
உன் விண்முட்டும் புகழ் வாழ்க!
வாழ்க!! வாழ்கவே!!

S. மௌனிகா XII-B

KAMARAJAR....♡ July-15



NARMADHA · M
XII CE

# காமராஜர் பிறந்த தினம்

- July 15

தமிழ்நாட்டின் தங்கமே !
ஏழைகளின் சொந்தமே !
பள்ளிக்கூடங்கள் கட்டி தந்த
படிக்க வச்ச தெய்வமே !
மதிய உணவு தந்த தந்தையே !
மனித கடவுளாய் வந்து
கஷ்டங்களை நீக்கி தந்த
கண் கண்ட தெய்வமே !
மீண்டும் ஒரு முறை
பிறப்பாயா என்று
வேண்டுகின்றேன் .

D. கீர்த்தனா
XI - CT

# காமராஜர் பிறந்த தினம்

- July 15

எண்ணமோ உயர்வு!
எளிமையோ வாழ்வு!
கல்வியறிவோ குறைவு!
ஆனால் நீ காலூன்றா
துறையே குறைவு
படிக்காத மேதை என்று
பார் போற்ற நடந்தாய்
படிக்காத நின் பிறந்தநாள்
கல்வி வளர்ச்சி நாள் என்று
கொண்டாடி மகிழ்ந்திட சிறந்தாய்

வாழ்கநின் புகழ்
என்றும் உயர்வாய்!

நன்றி

ப. கிர்த்திகா
XI - CT

# காமராஜர் - July - 15

* காமராஜர் அவர்கள் 1903 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் நாள் பிறந்தார்.
* இவர் தமிழ்நாட்டில் விருநகர் மாவட்டத்தில் பிறந்தார்.
* காமராசரின் தந்தை குமாரசாமி தாயார் சிவகாமியம்மாள் ஆவார்.
* காமராஜர் அவர்கள் 16 வயதில் காங்கிரஸ் கட்சியில் இணைந்துக் கொண்டார்.
* 1954 ஆம் ஆண்டு முதல் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற காமராஜர் 1963 ஆம் ஆண்டு வரை ஒன்பது ஆண்டுகள் ஆட்சி செய்தார்
* காமராஜர் இலவச கல்வி திட்டம் மதிய உணவு திட்டம் என பல திட்டங்களை தொடங்கி வைத்தார்

ர. துர்கா

"X - C"

# கர்மவீரர் காமராஜர்.

* காமராஜர் அவர்கள் 1903 ஆம் ஆண்டில் ஜூலை மாதம் 15 ஆம் நாள் பிறந்தார்.
* உடல் கறுப்பு என்றாலும் வெள்ளை உள்ளம் கொண்டவர்.
* இவர் தமிழ்நாட்டில் விருதுநகர் மாவட்டத்தில் பிறந்தார்.
* 1954 ஆம் ஆண்டில் காமராஜர் தமிழகத்தில் முதலமைச்சராக வாக்கித்தார்.
* காமராசரின் தந்தை குமாரசாமி தாயார் சிவகாமியம்மாள் ஆவார்.
* தமிழகத்தில் 1300 கல்விகளை ஆரம்பித்தார்
* இவருடைய இயற்பெயர் "காமாட்சி". அவருடைய தாயார் செல்லமாக அவரை ராஜா என்று அழைப்பார். அதுவே பின்னர் காமராஜர் என்று மருவி வந்தது.
* கல்விக்கண் திறந்தவர் என காமராஜர் போற்றப்படுகிறார்
* காமராஜர் அவர்கள் 16 வயதில் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்டார்
* பல நீர்த்தேக்கங்கள் திட்டத்தை ஆரம்பித்தார்.
* காங்கிரஸ் கட்சி தலைவரான சத்யமூர்த்தி அவர்களை அரசியல் குருவாக ஏற்றார்.
* கல்வித்துறையில் பல புரட்சிகளை செய்தார்
* காமராஜர் அவர்கள் இலவச மதிய உணவு திட்டத்தை ஆரம்பித்தனர்.

D. கனிஷ்கா

VI-A

# Kamarajar Birthday july 15

Kamaraj's birthday celebrated on july 15th is a day of remembrance and reflection on his contributions to education and Social reform in Tamil Nadu. He was a visionary leader who prioritized education particularly for the underprivileged and his policies transformed the educational landscape of the State. He was born in 1903 in Virudhunagar.

V. Sandhiya
X-D

# காமராஜர் பிறந்தநாள்

# ஜூலை 15

கருப்பு காந்தியே!
கண்ணியமானவரே!
வெண்ணிற ஆடை
அணிந்தவரே!
பல ஆயிரம் பள்ளிகளைத்
திறந்த பகுத்தறிவு
பகலவனே!
தென்னகத்து தென்றலே!
உழைப்பால் உயர்ந்தவரே!
உத்தம வீரரே
பாரத ரத்னாவே!
புவி உள்ளவும்
புகழ் மங்காதவரே!
உம்மை நாங்கள்
வணங்குகிறோம்

ரித்திகா. வை
XII - B

ஜூலை 15 - காமராஜர் பிறந்த நாள்.

*காமராஜர் அவர்கள் 1903 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி விருதுநகரில் பிறந்தார்.

* இவருடைய தந்தையின் பெயர் குமாரசாமி தாயார் சிவகாமி அம்மையார்.

* விருதலை வீரர் திரு. சத்தியமூர்த்தியின் வாரிசாக விளங்கியவர் காமராஜர்.

* 1954 ஆம் ஆண்டு அனைவரின் பேராதரவுடன், காமராஜர் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவி ஏற்றார்.

* கட்டாயக் கல்வி, இலவசக் கல்வி இலவச மதிய உணவுத் திட்டம் எனப் பல திட்டகளை உருவாக்கிவைத்தார்.

* 1976 இல் இந்தியாவின் உயரிய குடிமகன் விருதான பாரத ரத்னா விருது அவருக்கு வழங்கப்பட்டது.

நன்றி.

K. கோபிகா
X-C.

# காமராஜரின் பிறந்த நாள் ஜூலை-15

தமிழ்நாட்டின் தங்கமே!!!

ஏழைகளின் சொந்தமே!!!

பல பள்ளிகளை திறந்து படிக்க

வைத்த தெய்வமே!!!

மதிய உணவு தந்த தந்தையே!!!

அணைகள் பல கட்டி கொடுத்த ஆதவனே!!!

மனித கடவுளாய் வந்து கஷ்டங்களை நீக்கி தந்த கண் கண்ட தெய்வமே!!!

மீண்டும் ஒரு முறை பிறப்பாயா என்று வேண்டுகின்றோம்.

நன்றி!!!

M. கீர்த்திகா

'V-C'

ஜூலை - 15 காமராஜர் பிறந்தநாள் தினம்



M. அன்ஷி IV-A

சர்வதேச நெல்சன் மண்டேலா

தினம்.

- July 18

சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் ஆண்டுதோறும் ஜூலை 18 அன்று கொண்டாடப்படுகிறது. இந்த நாள் நெல்சன் மண்டேலாவின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் கொண்டாடபடுகிறது. ஐக்கிய நாடுகள் சபை 2009 ஆம் ஆண்டில் இந்த தினத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. அவரது வாழ்நாள் முழுவதும், சமத்துவம் நீதி மற்றும் மனித உரிமைகளுக்காகப் போராடினார்.

ர. ரூபஸ்ரீ

IX - E

நெல்சன் மண்டேலா சர்வதேச தினம் - ஜூலை (18)

காலத்தின் மதிப்பு தெரிந்தால்

உனக்கு வாழ்வின் மதிப்பு தெரியும்

விழாமலே வாழ்ந்தோம்
என்பதல்ல விழும்
ஒவ்வொரு முறையும்
மீண்டு எழுந்தோம் என்பதே
வாழ்வின் பெருமை.

என் வெற்றிகளை வைத்து என்னை
எடை போடாதீர்கள்


மாறாக, நான் எவ்வளவு தடவை

தோல்வியிலிருந்து மீண்டு வந்தேன்..

என்பதை வைத்து எடை போடுங்கள்

தமிழரசி-K
V.D

Name : V. KARUNIYA.
STD : VII -D .
DATE : 4/7/2025.



20th July

# WORLD CHESS DAY

# சர்வதேச சதுரங்க தினம் - ஜூலை 20

சதுரங்கம் என்பது இரண்டு பேர் விளையாடும் ஒரு பலகை விளையாட்டு

இது அரசர்களின் விளையாட்டு என்றும் அழைக்கப்படுகிறது

தமிழில் இதை வல்லாட்டம் என்று சொல்வார்கள்

ஆரம்ப காலத்தில் இது சதுரங்கா என்று அழைக்கப்பட்டது

இது போர் படைகளை குறிக்கும் ஒரு சொல்லாகும்

சதுரங்கம் இந்தியாவில் சுமார் 6-ம் நூற்றாண்டில் உருவானதாக நம்பப்படுகிறது

பின்னர், இது பெர்சியா மற்றும் அரபு நாடுகளுக்கு பரவியது, அங்கிருந்து ஐரோப்பாவிற்கு சென்றடைந்தது

ஜனனி D

IV-D

## ஜூலை 28

## உலக இயற்கை வளம் பாதுகாப்பு தினம்.

* "இயற்கையை நாம் பாதுகாத்தால் இயற்கை நம்மை பாதுகாக்கும்"

* இயற்கையை நீ நேசித்தால் இயற்கை உன்னை நேசிக்கும்.

* இயற்கைக்கு கை கொடுப்போம்.

* மரம் வளர்ப்போம் மழைபெறுவோம். மண் வளத்தை பாதுகாப்போம்.

* இயற்கை வளங்கள் நிறைந்த அழகு.

* புவி வெப்பமயமாதலை தடுக்க மரம் நடுதல் ஒன்றே தீர்வு.

* இயற்கை வளங்கள் நமக்கு கிடைத்த பொக்கிஷம்.

* இயற்கையின் கோபத்தை எவராலும் தடுக்க இயலாது.


* இயற்கை இல்லாமல் மனிதர்களால் வாழ முடியாது.

* இயற்கை வளங்கள் நிறைந்த பூமி நம் பூமி.

* விவசாயமும், விவசாயியும் உலகத்தில் இரு கண்கள் என போற்றப்படலாம்.

S.R. மைஷாலி
VI-A

ஜூலை -28 உலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு தினம்




H. JEEVA
X-B


உலக சுற்றுச்சூழல் பாதுகாப்புதினம் - July 28
Save
Tree
Save
EARTh
S. Tharun
X - A

DAY: 15th July 2025....




N. Bhavana
X-C.






மோனிகா VI B

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் - July 28




உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம்
July-28


உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம் - July 28
P. சூரியா
X - B


July-28 உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம்
R. Sumithra
VIII-D

## உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினம்

ஜூலை 28

* "இயற்கையோடு இயைந்து வாழ்" என்பதற்கேற்ப சுற்றுச்சூழலை பாதுகாக்க, நாம் இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும்.

நெகிழிக் குப்பைகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளை நீர்நிலைகளின் கலக்காமல் பாதுகாக்க வேண்டும்.

நன்றி!

S.VASANTHI

'XI'-B

# சர்வதேச புலிகள் தினம்

## ஜூலை - 29




TIGER IS A SYMBOL OF BEAUTY
BRAVERY, STRENGTH AND
NATIONALITY. SO SAVE THE
TIGER. SAVE THE NATION.

PRIDE

Name = Vishnu
Class: VB


சர்வதேச புலிகள் தினம்
௨௯/௭/௨௦௨௫
- ஜூலை
VII - அ

# சர்வ தேச புலிகள் தினம் - ஜூலை-29

நாம் வாழ நீரும் சுத்தமான காற்றும் வேண்டும்.

வனம் பெருக புலிகள் வேண்டும்.

நம் தேசிய விலங்கான புலிகளும் வாழ வேண்டும்.


புலி இந்தியாவின் தேசிய விலங்கு ஆகும்.

புலிகள் மாமிசம் மட்டுமே உண்ணும்

புலிகளால் மணிக்கு 65 கிலோமீட்டர் வேகம் வரை ஓட முடியும்.

S. யுவஸ்ரீ
VC

# சர்வதேச புலிகள் தினம் ஜூலை-29



இந்த நாள் புலிகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அனுசரிக்கப்படுகிறது. 2010 ஆம் ஆண்டு ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடைபெற்ற புலிகள் உச்சி மாநாட்டில் இந்த தினம் உருவாக்கப்பட்டது.

S. வைஷ்ணவி
VI - A

# ஜூலை 29 சர்வதேச புலிகள் தினம்.

காடுகளின் காவலன் என அழைக்கப்படும் புலி நம் நாட்டின் தேசிய வனவிலங்கு ஆகும். உலக அளவில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வந்ததை தொடர்ந்து புலிகளை பாதுகாக்கும் நோக்கில் ஆண்டு தோறும் ஜூலை 29-ம் தேதி சர்வதேச புலிகள் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. 5 ஆண்டுகளுக்கு முன்பு அழிவின் விளிம்பில் இருந்த புலிகளின் எண்ணிக்கை அண்மையில் கணிசமாக உயர்ந்துள்ளது. இந்தியாவில் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை புலிகள் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

R. DHARSHINI
IX-E

"சர்வதேச புலிகள் தினம் ஜூலை 29"

அழிந்து வரும் புலி இனத்தை பாதுகாக்கும் வகையில் ஆண்டுதோறும் "ஜூலை 29 ஆம் தேதி சர்வதேச புலிகள் தினம்" கொண்டாடப்படுகிறது. சர்வதேச புலிகள் தினத்தை முன்னிட்டு ஒடிசா மாநிலம் பூரி கடற்கரையில் மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் 'எங்களை காப்பாற்றுங்கள்' என புலி சிற்பத்தை வடிவமைத்துள்ளார். இந்தியாவின் தேசிய விலங்கான புலிகளின் எண்ணிக்கை கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்னதாக 97% இருந்த நிலையில், 100,000 புலிகள் வனப்பகுதிகளில் சுற்றித் திரிந்தன. அதில் தற்போது 4,000 புலிகள் மட்டுமே இருக்கின்றன. சில ஆண்டுகளாகவே குறைந்து காணப்பட்ட நிலையில், உலக அளவில் ஒரு இலட்சமாக இருந்த புலிகளின் எண்ணிக்கை தற்போது 3,200 ஆக உயர்ந்துள்ளது. ஆகவே புலிகளை பாதுகாக்கும் நோக்கில் சர்வதேச புலிகள் தினம் கொண்டாடப்படுகிறது.

விஜயலட்சுமி. கி
X - A

# உலக நட்பு தினம்

ஜூலை 30

நட்பு தினம் (சர்வதேச நட்பு தினம் அல்லது நண்பர்கள் தினம் என்றும் அழைக்கப்படுகிறது. பல நாடுகளில் நட்பைக் கொண்டாடும் ஒரு நாளாகும். இது ஆரம்பத்தில் வாழ்த்து அட்டைத் துறையால் ஊக்குவிக்கப்பட்டது; சமூக வலைப்பின்னல் தளங்களிலிருந்து வரும் சான்றுகள் இணையத்தின் பரவலுடன், குறிப்பாக இந்தியா, பங்களாதேஷ் மற்றும் மலேசியாவில் வளர்ந்திருக்கக் கூடிய நட்பு தினத்தின் மீதான ஆர்வத்தின் மறுமலர்ச்சியைக் காட்டுகின்றன. மொபைல் போன்கள், டிஜிட்டல் தொடர்பு மற்றும் சமூக ஊடகங்க இந்த வழக்கத்தை பிரபலப்படுத்த பங்களித்துள்ளன. தெற்காசியாவில் இந்த நாளை ஊக்குவிப்பவர்கள் நண்பர்களின் நினைவாக ஒரு நாளை அர்ப்பணிக்கும் பாரம்பரியம் 1935 இல் அமெரிக்காவில் தோன்றியதாகக் கூறுகின்றனர்.

ச. ஹைமதர்ஷினி

X-'A'

# சர்வதேச நட்பு தினம்

## ஜூலை - 30.

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 30ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் நண்பர்கள் ஒருவருக்கொருவர் பரிசுகளை கொடுத்து, தங்கள் நட்பை கொண்டாடுகிறார்கள். இந்த நாளில் நண்பர்கள் ஒன்றாக நேரத்தைச் செலவிடுவதும் இந்த நாளில் வழக்கமான ஒன்று. இந்த நாள் முதன்முதலில் 1958-ல் பராகுவேயில் அறிமுகப்படுத்தப்பட்டது. பூக்கள், வாழ்த்து அட்டைகள், கங்கணக் கயிறுகள் போன்றவற்றை பரிமாற்றி நட்பை வெளிப்படுத்துகிறார்கள்.

ப. நிஷா
IX - E

சர்வதேச உலக

நட்பு தினம் . . . ஜீலை 30

ஆயிரம் சொந்தம் நம்மை

தேடி வரும் . . .

ஆனால் தேடினாலும் கிடைக்காத

ஒரு சொந்தம்

நல்ல நண்பர்கள் . . .

புன்னகை ஒன்றே போதும்

நண்பர்களை சேகரிக்க

புதைந்து போகும் வரை

தொடர்ந்து வரும் நம்

நல்ல நட்பு . . .

கட்டிக் கொடுக்கும் நண்பன்

இருந்தால் வேதனை கூட

சாதனை ஆகும் . . .

நல்லவனாய் இருந்தால் வாழ்ந்துப்

பாரு தான் சொர்க்கம் நண்பனோடு

இருந்துப்பார் வாழும் போதே


சொர்க்கம் . . .

N. Harshini

X - B


R. யுவஸ்ரீ X A
ஜூலை 30 சர்வதேச நட்பு தினம்
HAPPY FRIENDSHIP DAY
FRIENDS

జూలై - 30



# INTERNATIONAL DAY OF FRINDSHIP

N·SUREKHA
X-A

ஜூலை
30

# சர்வதேச நட்பு தினம்




## நண்பர்கள் தின கவிதை

ஆயிரம் கோடி
நட்சத்திரம்
விண்ணில் இருந்தாலும்
விண்ணுக்கு அழகு நிலவு தான்....
ஆயிரம் உறவுகள் மண்ணில்
இருந்தாலும் வாழ்க்கைக்கு
அழகு நட்பு தான்.....

M.திவ்யா

# World ♡ FriendShip DAY



JULY 30

R. RAKShitha

## சர்வதேச உலக

## நட்பு தினம்... ஜூலை 30

ஜூலை 30 ஐக்கிய நாடுகள் சபையில் சர்வதேச 'நட்பு தினம்'... நட்பின் முக்கியத் துவத்தைப் பற்றி படித்து. அதற்கு ஒரு சிறப்பு நாளை ஏன் ஐக்கிய நாடுகள் சபை முடிவு செய்தது என்பதைக் கண்டறியவும்... முதலில் தயாரிப்புப் பணியைச் செய்யுங்கள்...

நட்பு என்பது மனிதர்களுக்கு இடையே உள்ள மிக அழகான உறவுகளில் ஒன்றாகும் வாழ்க்கையில் விஷயங்கள் தவறாக நடக்கும் போது நம் நம்பிக்கையை அதிகரிக்க, மனச்சோர்விலிருந்து நாம் மீள ஒரே ஒரு உண்மை நண்பன் இருந்தால் போதும்...

அன்பினால் பிணைக்கப்பட்ட மனித உறவின் தூய்மையான வடிவமாக நட்பு இருக்கிறது... வாழ்வின் எந்த கட்டத்திலும் நமக்காக உறுதுணையாக இருக்கும்... நண்பர்களை பெருமிதமாக நினைவு கூரும்...

இதன் வகையில் உலக சர்வதேச நட்பு தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது...

by...

M. Dharshini

X-B

விடியல்

## நட்பு கவிதை - July 30

அறிமுகம் இல்லாமல் வந்தோம்
அடிக்கடி பேசிக்கொண்டோம்
உறவுகளுக்கு மேலே
உயிர் ஆனோம் காலங்கள்
கடந்து சென்றாலும்
கடைசிவரை தொடரவேண்டும்
நம் நட்பு...♥



S. Kaviya
XII - CE

# உலக நட்பு

## தினம் - ஜூலை - 30

ஆட்சி கொள்வது நட்பு அல்ல

உணர்ந்து கொள்வதே நட்பு. குற்றம்

காண்பது நட்பு அல்ல சுற்றம்

பேணுவதே நட்பு எதிர் பார்ப்பது

நட்பு அல்ல எதையும் கொடுப்பதே

நட்பு பொழுதுக்காக கூடுவது நட்பு

அல்ல நல்ல பாதை வகுப்பதே

நட்பு என்பது புனிதமானது.

K. YUVASRI

X - "C"

உ

# சர்வதேச நட்பு தினம்

- July 30

நட்பு நாள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு தினங்களில் கொண்டாடப்படுகின்றது. முதன் முதலில் 1958 ஆம் ஆண்டு நட்பு நாள் கொண்டாடப்பட முன்மொழியப்பட்டது 2011 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை சூலை 30 ஆம் திகதியை சர்வதேச நட்பு நாளாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது இருப்பினும் இந்தியா உட்பட சில நாடுகள் ஆகஸ்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையை நட்பு நாளாக கொண்டாடுகின்றன. நேபாளத்தில் சூலை 30 ஆம் திகதியும், ஓகையோவின் ஓபர்லினில் ஏப்ரல் 9 ஆம் திகதியும் நட்பு நாள் கொண்டாடப்படுகின்றது

ஓ. இந்துமதி

XII-A




VARShini.Y VII-D

## சர்வதேச நட்பு தினம் - ஜூலை 30



சர்வதேச நட்பு தினம், அல்லது நண்பர்கள் தினம், ஆண்டுதோறும் ஜூலை 30ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இது ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நாளாகும். மேலும் இது மக்கள், நாடுகள் மற்றும் கலாச்சாரங்களிடையே நட்புறவை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

S. ஹாசினி
V - A

# ஜூலை 30 சர்வதேச நட்பு தினம்



கடிகாரம் நின்று விட்டால்
காலமும் நின்று விடுமா
என்ன?
அதைப் போல் தான் நம்
நட்பு
நம் சந்திப்பு நின்று விட்டாலும்
நம்முடைய நட்பு
என்றென்றும் தொடர்ந்து
கொண்டே இருக்கும்

N. Vasundhara
VII-A

# சர்வதேச நட்பு தினம்.

ஜூலை : 30.

வாழ்க்கையில் அன்பின் மூலம்
நம்பிக்கையான நட்பு வட்டாரங்களை
சம்பாதித்து வையுங்கள், ஏனெனில்
பெற்றோர்களுக்கு அடுத்து நம்முடன்
எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி
பயணிக்கும் உறவுகள் அவர்கள்
மட்டும் தான்

நன்றி !

P. சஞ்சனா
IX - B.